07.03.2017

தினமணி

## வறட்சியால் கால்நடை தீவனம் தட்டுப்பாடு: வைக்கோல் சேமிப்பில் முனைப்புக் காட்டும் விவசாயிகள்



காவிரி படுகையில் ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கான தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மாடுகளுக்காக வைக்கோல் சேமிப்பில் விவசாயிகள் முனைப்புக்காட்டி வருகின்றனர். வைக்கோலுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு முன்னெப்போதும் இல்லாத அளவில் விலை உயர்ந்துள்ளதால் மாடு வளர்ப்போர் கவலையடைந்துள்ளனர்.

வடகிழக்குப் பருவமழை பொய்த்துப்போனதால் நெல் உற்பத்தி மட்டுமல்லாது அதை சார்ந்த கால்நடை வளர்ப்பு போன்றவையும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்காக தனியாக மேற்கொள்ளப்படும் புல் உற்பத்தி, பதப்படுத்தப்பட்ட நிலக்கடலை செடி போன்றவை தட்டுப்பாடாகியுள்ளது.

அத்துடன், மாடுகளின் முக்கிய தீவனமாக உள்ள வைக்கோலுக்கு முன்னெப்போதும் இல்லாத அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் பெருமளவான குடும்பங்கள் கால்நடை வளர்ப்பை முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. அதிலும் மாடுகள் வளர்ப்பு பிரதானமாகும்.

இந்தப் பகுதியில் உள்ள உம்பளச்சேரி பாரம்பரிய இனம் உள்ளிட்ட மாடுகள் வளர்ப்பு வைக்கோலை நம்பியே உள்ளன. கடந்த சம்பா பருவ நெல் சாகுபடி பெருமளவில் பாதிப்புக்குள்ளானது. சில இடங்களில் நடைபெறும் அறுவடையில் இயந்திரங்களுக்கான வாடகைக்குக்கூட நெல் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

ஆனாலும், குறைந்த அளவு வைக்கோலாவது கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பில் நெல் அறுவடை செய்யப்படுகிறது. வழக்கமாக அறுவடையின்போது நெல் மணிகளை மழை போன்ற இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்க முனைப்புக் காட்டும் விவசாயிகள், தற்போது வைக்கோலை பாதுகாக்கவும், சேமிக்கவும் கவனம் செலுத்துகின்றனர். மாடு வளர்ப்போர், தங்களது வயல்களில் தேவையான அளவு வைக்கோல் கிடைக்காத நிலையில், வெளியிடங்களில் விலைக்கு வாங்குகின்றனர்.

வைக்கோல் போரில் மழைநீர் உள்புகுந்து வீணாவதை முற்றிலுமாகத் தடுக்க பாலித்தீன் பாய்களை பயன்படுத்தி மூடி பாதுகாப்பது வைக்கோலுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.
வயலிலில் இருந்து வைக்கோலை சேமிக்க ஆள்தட்டுப்பாடு

நிலவுவதால் ஆள் ஒன்றுக்கு ரூ. 600-க்கும் மேல் கூலி அளிக்கின்றனர்.

சிலர், சாகுபடியாளருக்கு கட்டுக்கு ரூபாய் நூறு என்ற விலையில் தொகை கொடுத்து, ஆள் வைத்து சேமித்து, வாடகை டிராக்டரில் ஏற்றிச் செல்கின்றனர். முன்பெல்லாம் சில நேரங்களில் சில இடங்களில் வயலிலேயே வைக்கோல் வீணாகும் நிலை மாறி, ஒரு கட்டு (25-35 கிலோ) வைக்கோல் ரூ. 400-க்கு மேல் விற்பனையாகிறது.

மாடு வளர்ப்புத் தொழிலை பாதுகாக்க மானிய விலையில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் அரசே வைக்கோலை வழங்கும் திட்டத்தை தாமதமின்றி தொடங்க வேண்டும். அதுவும், செல்வாக்குடையவர்கள் என்ற பாரபட்சம் இல்லாமல் மாடு வளர்க்கும் அனைத்துத் தரப்பினருக்கும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் எதிர்ப்பார்ப்பு.

**காரைக்காலில் மத்தியக் குழுவினர் ஆய்வு**



காரைக்காலில் வறட்சியால் பாதித்த விளைநிலப் பகுதிகளில் மத்தியக் குழுவினர் திங்கள்கிழமை ஆய்வு செய்து, விவசாயிகளிடம் பயிர் சேதம் குறித்த விவரங்களை கேட்டறிந்தனர்.

காரைக்கால் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 5 ஆயிரம் ஹைக்டேர் அளவில் நெல் சாகுபடி நடைபெறும். கடந்த 2016-ஆம் ஆண்டு சம்பா சாகுபடிக்குத் தேவையான காவிரி நீர் வரத்தின்மையாலும், பருவமழை பொய்த்ததாலும் விவசாயிகள் பலர் பயிர் செய்ய முடியாமலும், ஆழ்குழாய் பாசனத்தைக்கொண்டு பயிரிட்ட இடங்கள் காய்ந்தும், மகசூல் குறைந்தும் பாதிக்கப்பட்டனர். காரைக்காலை வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று புதுச்சேரி அரசை வலியுறுத்தி வந்தனர்.

புதுச்சேரி அரசின் வேண்டுகோளின்படி மத்தியக் குழுவினர் மத்திய வேளாண் துறை இணைச் செயலர் ஐ. ராணி குமுதினி தலைமையிலான குழுவினர் ஞாயிற்றுக்கிழமை புதுச்சேரி வந்தனர். இந்த குழுவினர் 2-ஆக பிரிந்து புதுச்சேரி, காரைக்காலில் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர். காரைக்கால் குழுவுக்கு எண்ணெய் வித்துகள் ஹைதராபாத் இயக்குநரக இயக்குநர் (பொ) கே. பொன்னுசாமி தலைமை வகித்தார். இவருடன், மத்திய குடிநீர் துறையின் உதவி ஆலோசகர் ஆர். சந்தோஷ், கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர் அனிர்பன் குஹா, செலவினத் துறை ஆலோசகர் எம். தீனாநாத், மத்திய கிராமப்புற மேம்பாட்டுத் துறை துணைச் செயலர் எஸ்.ஆர். மீனா ஆகியோரும் வந்திருந்தனர்.

இக்குழுவினர் காரைக்கால் பகுதியில் கீழவெளி, திருவேட்டக்குடி, புத்தக்குடி, மேலையூர் பகுதிகளுக்குச் சென்றனர். பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் இறங்கி, பயிர் நிலவரத்தை பார்வையிட்டனர். விவசாயிகளிடம் பாதிப்பு விவரங்களை கேட்டறிந்தனர்.

குறிப்பாக தண்ணீர் வரும் காலம், எந்த காலத்தில் எந்த வகையான நெல் பயிரிடப்பட்டது, பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு அளவு, விதைக்கும் காலம் முதல் அறுவடை காலம் வரை ஏக்கருக்கு செலவான தொகை, வைக்கோல் விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை, கால்நடை பாதிப்பு, கால்நடைக்கு தீவனம் தரும் முறை மற்றும் அளவு உள்ளிட்ட பல விவரங்களை கேட்டறிந்தனர். மத்தியக் குழுவினரிடம் விவசாயிகள் வலியுறுத்தல்: காரைக்காலுக்கு முறையாக காவிரி தண்ணீர் வருவதில்லை. காலம் கடந்து வரும் காவிரி நீர், பருவமழையால் பயனிருக்கவில்லை. எனவே, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

காரைக்கால் பகுதியில் சிற்றேரிகள் வெட்டுவதற்கும், குளங்களை மேம்படுத்துவதற்கும் மத்திய அரசு புதுச்சேரி அரசுக்கு உரிய நிதி ஒதுக்கித் தர வேண்டும். குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. இந்த சூழலில், காரைக்காலில் ஹைட்ரோ கார்பன் எரிவாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு அனுமதித்துள்ளது. இந்தத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். காரைக்காலில் பெரும்பாலான இடங்கள் உவர் நீர் கிடைக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

சில இடங்களில் மட்டுமே குடிநீர் கிடைக்கும் சூழலில், ஹைட்ரோ கார்பன் திட்டம் வந்தால் பெரும் பாதிப்பு உருவாகும். எனவே, வறட்சியால் பாதித்த காரைக்கால் விவசாயிகளுக்கு அதிகப்பட்ச நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். புத்தக்குடி பகுதியில் நடைபெற்ற ஆய்வின்போது, புதுச்சேரி வேளாண் துறை அமைச்சர் ஆர். கமலக்கண்ணன்

கலந்துகொண்டார்.
அப்போது மத்தியக் குழுவினரிடம் கால்நடைகளுக்கான மருந்துகள் காரைக்காலில் இல்லை போன்ற புகார்களை தெரிவித்தனர். அப்போது பேசிய மத்தியக் குழுவினர், மத்திய அரசிடம் கால்நடை தொடர்பான பல சிறப்புத் திட்டங்கள் உள்ளன. உரிய வழிகாட்டலின்படி புதுச்சேரி அரசு அதற்கான திட்ட அறிக்கைகள் அளித்து பயனடையலாம் எனக் கூறினர். இதற்கான நடவடிக்கைகளை தாங்கள் எடுப்பதாக அமைச்சரும், மாவட்ட ஆட்சியரும் அவர்களிடம் தெரிவித்தனர்.

ஆய்வு நிறைவில் செய்தியாளர்களிடம் மத்தியக் குழுத் தலைவர் கே. பொன்னுசாமி கூறியது:
புதுச்சேரி அரசு கடந்த 2016-17 ஆம் ஆண்டில் மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டு விவசாயம் பாதித்துவிட்டது. மத்தியக் குழு வந்து பார்வையிட வேண்டும் என மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் நாங்கள் புதுச்சேரிக்கு வந்துள்ளோம். ஆய்வு விவரங்கள் தொடர்பாக அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்திவிட்டு, மத்திய அரசிடம் அறிக்கை ஓரிரு நாளில் சமர்ப்பிப்போம். நிவாரணம் தொடர்பாக மத்திய அரசே இறுதி முடிவு எடுக்கும் என்றார்.
மாவட்ட ஆட்சியர் ப. பார்த்திபன், கூடுதல் வேளாண் இயக்குநர் கா. மதியழகன், கால்நடைத்துறை இணை இயக்குநர் லதா மங்கேஷ்கர் உள்ளிட்ட அதிகாரிகள் மத்தியக் குழுவினருடன் சென்றிருந்தனர்.

## பருத்தியை அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும்: மத்திய அமைச்சருக்கு சைமா கடிதம்

By DIN | Published on : 07th March 2017 04:04 PM | **அ+அ அ-** |



பருத்தியை அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி சைமா சார்பில் மத்திய ஜவுளித் துறை அமைச்சருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுகுறித்து, தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் (சைமா) சார்பில் மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானிக்கு அனுப்பப்பட்டுள்ள கடித விவரம்:

ஜவுளித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பஞ்சு விலையைக் கட்டுப்படுத்தி, நூல் விலை ஏற்றத்தைத் தடுக்கும் வகையில் காட்டன் கார்பரேஷன் ஆ∴ப் இந்தியா (சிசிஐ) சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிலைச் சேர்ந்த நேரடி உபயோகிப்பாளர்களுக்கு மட்டும் பஞ்சு விநியோகம் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது வரவேற்புக்குரியது. கடந்த மூன்று மாதங்களாக பஞ்சு விலை உயர்ந்து கொண்டே வருகிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ரூ. 40 ஆயிரத்துக்கு விற்பனையான ஒரு கேண்டி பருத்தி, தற்போது ரூ. 46 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

இதனால் நூல் விலையும் கிலோவுக்கு ரூ. 25 உயர்ந்துள்ளது. விவசாயத்துக்கு அடுத்தபடியாக கைத்தறி, விசைத்தறி, பின்னலாடைத் தொழில் ஆகியவை கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இவ்வாறு இருக்கும் நிலையில் இந்தத் தொழில் அடிக்கடி இதுபோன்ற

பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு, வங்கதேசத்துக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜவுளி இறக்குமதிச் சலுகை வழங்கியது, பஞ்சு ஏற்றுமதி, பெரிய ஏற்றுமதியாளர்கள் பஞ்சை பதுக்குவது போன்றவை முக்கியக் காரணங்களாகும்.

இதில், சிசிஐ பஞ்சை கொள்முதல் செய்து நேரடி உபயோகிப்பாளர்களுக்கு வழங்குவதைக் கட்டாயமாக்க வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் விலையை அரசே நிர்ணயம் செய்யவேண்டும். பஞ்சு விலை குறைந்தாலும் விவசாயிகளுக்கு அதே விலையைக் கொடுக்க வேண்டும்.

நாட்டில் 300 முதல் 350 லட்சம் பேல்கள் பருத்தி உற்பத்தியாகிறது. இதில், உள்நாட்டுத் தேவை 275 முதல் 300 லட்சம் பேல்கள் ஆகும். நமது தேவையைக் கருத்தில் கொண்டு மீதமுள்ள பஞ்சில் மாதந்தோறும் 5 லட்சம் பேல்கள் மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும். விவசாயிகளிடம் சிசிஐ நியாயமான விலை கொடுத்து வாங்கி, நியாயமான விலைக்கு விற்றால் உள்நாட்டுத் தேவைக்கும், கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வேலை வாய்ப்புக்கும் பாதிப்பு வராது. அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் பருத்தியைச் சேர்க்க வேண்டும். இக்கோரிக்கைகளைப் பரிசீலித்து கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.